# சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்குக் கைகொடுக்கும் தொழிற்கல்லூரிகள்

நகரச் சூழலில், இயந்திர மனிதத் தொழில்நுட்பம், தானியக்கமய வழிகளை உருவாக்குவதற்கான ஆற்றல்களைப் பலதுறைத் தொழிற்கல்லூரிகளில் இருந்து சிறிய, நடுத்தர நிறுவனங்கள் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்க இருக்கிறது.

செயற்கைப் புரதங்கள், சுற்றுச் சூழல் போன்ற புதிய துறைகளில் கிடைக்கும் வாய்ப்புகளை, உணவு தயாரிப்பு நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள ஆதரவும் கிடைக்க உள்ளது.

எண்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பு, புத்தாக்க மையம் ஒன்றை அமைக்கும்.

நகரமயச் சூழலில் இயந்திர மனிதத் தொழில்நுட்பம், தானியக்கமயத் தீர்வுகளைக் காண அந்த மையம் பாடுபடும்.

அதேவேளையில், உணவு உற்பத்தித்துறைக்கான இப்போதைய புத்தாக்க மையம் விரிவுபடுத்தப்படும். சாண்ட்ஸ் கண்காட்சி, மாநாட்டு மையத்தில் வியாழக்கிழமை நடந்த சிறிய, நடுத்தர நிறுவன தொழில்நுட்ப நாள்-2023 நிகழ்ச்சியில் வர்த்தக, தொழில் அமைச்சர் கான் கிம் யோங் இவற்றை அறிவித்தார்.



நீ ஆன் பலதுறைத் தொழிற்கல்லூரி உருவாக்கி இருக்கும் காற்றுத்தர கண்காணிப்புச் சாதனம் ஒன்றை வர்த்தக, தொழில் அமைச்சர் கான் கிம் யோங் ஒரு கண்காட்சியில் பார்வையிட்டார். **படம்: சாவ் பாவ்**

புதிய புத்தாக்க மையம், சிறிய, நடுத்தர நிறுவனங்களுடன் சேர்ந்து புதிய பொருள்களை, புதிய சேவைகளை, தீர்வுகளை உருவாக்கும்.

சிறப்புமிக்க சாதனங்களை, ஆய்வுக் கூடங்களை, பயிற்சி வசதிகளை நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள உதவும் ஒரே இட புத்தாக்க மையமாக அது திகழும். ஆலோசனை, மதிப்பீட்டு ஆய்வுகள், இணை தயாரிப்புகள் உள்ளிட்ட ஆதரவையும் அது வழங்கும்.

ஆய்வு உருவாக்க வளங்களை, புத்தாக்க ஆற்றல்களை, வசதிகளைச் சொந்தமாக ஏற்படுத்திக்கொள்வதில் சிறிய, நடுத்தர நிறுவனங்கள் பல சவால்களை எதிர்நோக்குகின்றன என அமைச்சர் குறிப்பிட்டார்.